## பறிக்கப்படும் பெண் உரிமைகளை மீட்டெடுக்க

# போராட்டப் பாதைகளை அடுத்த தலைமுறைக்குச் சொல்ல வேண்டும்!

## காங்கேயம் புத்தகத் திருவிழாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

காங்கேயம், ஜூன் 20 -

**பறிக்கப்படும் பெண்ணுரிமைகளை மீட்டெடுக்க, கடந்து வந்த போராட்டப் பாதைகளை அடுத்த தலைமுறையினருக்குச் சொல்ல வேண்டும் என்று காங்கேயத்தில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் - மக்களவை கழகக் குழுத் துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் பழைய கோட்டை சாலையில் உள்ள தீரன் திடலில் காங்கேயம் நகர ரோட்டரி சங்கத்தின் சார்பில் நடைபெற்றுவரும் காங்கேயம் புத்தக திருவிழா - 2023 மற்றும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற சிந்தனை அரங்கம் நிகழ்ச்சியில் கழக துணைப் பொதுச்செயலாளரும், கழக நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டு “பெண்கள் முன்னேற்றத்தில் கல்வி” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

கலை பாரம்பரிய கலை மன்றத்தினருக்கு செயற்கரிய செய்வர் விருதை வழங்கினார். முன்னதாககாங்கேயம்புத்தகதிருவிழாவில் இடம்பெற்றிருக்கும் புத்தக அரங்குகளை கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பார்வையிட்டார்.

பின்னர் புத்தக விழாவில் கனிமொழிகருணாநிதி எம்.பி. ஆற்றிய உரை வருமாறு:-

“காங்கேயத்தின் ரோட்டரி கிளப்புக்கு என் வாழ்த்துகள். 4 கோடி செலவில் மயானம், நூலகங்கள் அமைத்து மக்களுக்கு அளித்திருக்கிறார்கள். இதையெல்லாம் தாண்டி ரோட்டரி கிளப் ஒரு புத்தகத் திருவிழாவை நடத்துகிறது என்றால் அதை விட பாராட்டத் தக்கது இல்லை.

பெண்கள் முன்னேற்றத்தில் கல்வி என்ற தலைப்பில் என்னை பேசச் சொல்லியிருக்கிறார்கள். இதில் நான் இரண்டு உதாரணங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். ஒன்று.... ஒரு புத்தகத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. பெண் குழந்தையாக இருந்தாலும் சிறுமியாக இருந்தாலும் இளம் பெண்ணாக இருந்தாலும் வயதானவளாக இருந்தாலும் அவளுக்கு சுயமாக சிந்தித்து சுதந்திரமாக செயல்படும் உரிமை தரப்படக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது மனுஸ்மிருதியிலே சொல்லப்பட்டிருக்கிறது.

அதேபோல சங்கத் தமிழில் இருந்து இரு பாடல்களை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். சங்க இலக்கியத்தில் ஔவையார் என்ற பெயரில் பெண்பாற் புலவர்கள் பலர் இருந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் எழுதிய பாடல்... தன்னுடைய நண்பனான அரசனுக்கு எதிராக போர் தொடுத்து வரத் தயாராகும் இன்னொரு அரசனிடம் சென்று அவர் சொல்கிறார். ‘என் அரசனுடைய ஆயுதங்கள் அடிக்கடி போர்களை சந்தித்து எதிரிகளை வீழ்த்தி முனை மழுங்கிக் கிடக்கின்றன. ஆனால் உன்னுடைய ஆயுதங்கள் அப்படியே பளபளவென பூஜை போட்டு கண்காட்சியிலே வைத்த மாதிரி இருக்கிறது. நீ அவற்றைப் பயன்படுத்தவே இல்லை. இந்த நிலையில் போர்களில் ஈடுபடுவதையே வழக்கமாக வைத்திருக்கும் என் அரசனிடம் மோதிப் பார்க்க வராதே’ என்கிறார் அந்தப் பெண் புலவர். இதை நான் சங்கத் தமிழாகவே சொல்கிறேன். அரசியலாக எடுத்துக் கொள்ளாதீர்கள். இப்படி சொல்லி போரை நிறுத்திய ஒரு பெண் நமது சங்க காலத்திலே வாழ்ந்திருக்கிறார். இன்னொரு ஔவை புலவர் அரசனை பார்க்க செல்கிறார். அவரை வாசலிலே வீரர் தடுத்து நிறுத்துகிறார். அப்போது அந்த பெண் புலவர், ‘என்னை அரசனுக்கு தெரியும். எனக்கு அரசனைத் தெரியும். நடுவிலே நீ யார் தடுத்து நிறுத்துவது? என்னைப் போன்ற கற்றவர்களை மதிக்காத காலம் இன்னும் வந்துவிடவில்லை. எந்த திசைக்கு போனாலும் என்னை வரவேற்க தயாராக இருக்கிறார்கள்’ என்று சொல்லிவிட்டு அந்த பெண் புலவர் செல்கிறார்.



**இதுதான் அவர்களுக்கும் நமக்குமுள்ள வித்தியாசம்!**

எங்கு வேண்டுமானாலும் ஒரு பெண் செல்ல முடியும், அரசனை கேள்வி கேட்க முடியும், போரை நிறுத்த முடியும் அப்படியென்றால் எந்த அளவுக்கு சுய சிந்தனை, கல்வி, அறிவு சங்க கால தமிழ்ப் பெண்களுக்கு தரப்பட்டிருக்கும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மனு ஸ்மிருதி பெண்ணை படிக்காதே, சிந்திக்காதே என்கிறது. நமது சங்கத் தமிழ் ஒரு பெண்ணை அனுப்பி போரை நிறுத்துகிறது. இதுதான் அவர்களுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம்,

இட ஒதுக்கீட்டை ஒதுக்கிக் கொண்டு வந்ததால் மெரிட் இல்லை என்று சிலர் சொல்கிறார்கள். சுதந்திரம் பெற்ற காலத்தில் நெல்லூரிலே ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான் அம்மாவட்டத்தின் அனைத்து முக்கிய பதவிகளிலும் இருந்திருக்கிறார்கள். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். அப்படிப்பட்ட உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறவர்களுக்கு மட்டும்தான் பதவிகள் என்ற நிலை இருந்தது. இங்கிருக்கும் ஆண்களுக்கே படிக்கக் கூடிய வாய்ப்பு அன்று இல்லை.எல்லா சமுதாயத்திலும் ஒடுக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் பெண்கள்தான். பெண்கள் ஆண் உடை உடுத்திக் கொண்டு ஆண்களாக நடித்துதான் மருத்துவக் கல்லூரிக்கு செல்லவே வாய்ப்பு கிடைத்தது. பெண்களுக்கு கல்வி கற்கும் வாய்ப்பே இல்லை என்ற நிலைதான் அன்று இருந்தது.அப்படிப்பட்ட நிலையில் மகாராஷ்டிரத்திலே பூலேவின் மனைவி சாவித்ரி பாய் பூலே படிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார். தன் மனைவியை அவர் பள்ளிக் கூடத்திலே சேர்க்கிறார். சாவித்ரிபாய் பள்ளிக் கூடத்துக்கு செல்லும்போது ஒரு சேலையை கட்டிக் கொண்டு இன்னொரு சேலையை கையில் எடுத்துச் செல்வார். ஏனென்றால் அவர் செல்லும் வழியில், ஒரு பெண் படிக்கப் போகிறாள் என்று அவர் மீது சகதியை எடுத்து வீசுவார்கள். பள்ளிக் கூடம் சென்று அவர் சேலையை மாற்றிக் கொள்வார். மீண்டும் வீட்டுக்கு வரும்போதும் வீசுவார்கள்.வீட்டுக்கு வந்து குளித்துவிட்டுதான் உள்ளே செல்வார். இப்படிப்பட்ட நிலைகளைத் தாண்டித்தான் பெண்கள் படிக்க செல்ல வேண்டும் என்ற நிலை இருந்தது.

இன்று கூட எல்லா நாடுகளிலும் பெண் கல்விக்கான சூழல் ஒரே மாதிரியாக இல்லை. படிப்பதற்காகவும், படிப்பதற்கான உரிமைக்காகவும் போராடக் கூடிய பெண்கள் இன்றும் இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள். உலக நாடுகளில் இதுகுறித்து எடுக்கப்பட்ட ஆய்வுகளில் சில முக்கியமான விஷயங்களை சொல்லியிருக்கிறார்கள். பெண்கல்வி உறுதிப்பட வேண்டுமென்றால் வறுமை ஒழிக்கப்பட வேண்டும், ஒரு வீட்டில் வறுமை இருந்தால் அந்த வீட்டில் பெண்ணை படிக்க வைக்க மாட்டார்கள். படித்துக் கொண்டிருந்தாலும் முதலில் பெண்ணின் படிப்பைதான் நிறுத்துவார்கள். சில இடங்களில் பெண்களை படிக்க வைக்க ரொம்ப தூரம் அனுப்ப மாட்டார்கள். ஆண்கள் அமெரிக்கா சென்று படிக்கலாம், யுகே சென்று படிக்கலாம். ஆனால் பெண் குழந்தைகள் என்றால் இடுப்பில் வைத்து பூட்டி சாவியை வைத்துக் கொள்வார்கள். எனவே வீட்டுக்கு அருகே பள்ளிகள் இருக்க வேண்டும். மூன்றாவதாக பெண் குழந்தைகள் படிக்க வேண்டும் என்றால்... ஆசிரியர்கள் பெண்களாக இருக்க வேண்டும்.

**இந்த பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு!**

இது இப்போது ஆய்வு செய்து வெளியிடப்பட்டிருக்கக் கூடிய அறிக்கை. ஆனால் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் ஆசிரியர்களாக பெண்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று சொன்னவர் தந்தை பெரியார். தலைவர் கலைஞர் 1970 களிலேயே தமிழ்நாட்டில் சின்னச் சின்ன ஊர்களில் 68 கல்லூரிகளை உருவாக்கித் தந்தவர். பெருந்தலைவர் காமராஜர் தொடங்கி இன்று வரை பள்ளிக் கூடங்கள் இல்லாத ஊரே இருக்கக் கூடாது என்ற நிலை தமிழ்நாட்டில் இருக்கிறது. வால்பாறையில் ஒரே ஒரு பிள்ளை வருவதற்காக மட்டுமே அரசுப் பள்ளி இருக்கிறது. இந்த பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு.

ஒரு பெண் படித்துவிட்டால் அடுத்த தலைமுறைக்கான கதவு திறக்கப்படும். ஒரு அம்மா கிராஜுவேட் ஆகிவிட்டார்கள் என்றால் அவரை வேலைக்கு அனுப்புகிறார்களோ இல்லையோ... அந்த பெண் உறுதியோடு நிற்பாள், ‘என் மகள் படிப்பாள். அவள் கனவைத் தொட்டு சாதிப்பாள்’ என்ற உறுதியோடு தன் மகளை படிக்க வைப்பாள். ஒரு பெண் படித்துவிட்டால், இத்தனை பிள்ளை பெற்றுக் கொடு என்றெல்லாம் அவளிடம் சொல்ல முடியாது. அவள் தன் உடல் நிலையை அறிந்து வைத்திருப்பாள். தனது அடுத்த தலைமுறை கல்வி கற்க வேண்டும் என்பதிலும், ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதிலும் தெளிவாக இருப்பாள். இந்த வகையில் ஒரு சமூகத்துக்கான மிகப்பெரிய மாற்றங்களை பெண் கல்விதான் கொண்டுவர முடியும்.

**இதுதான் திராவிட மாடல் ஆட்சி!**

அதனால்தான் தந்தை பெரியார் சொன்னார், ‘பெண்களின் கையில் கரண்டியை எடுத்துவிட்டு புத்தகங்களைக் கொடுங்கள்’ என்று கூறினார். ஒருகாலத்தில் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்று கேட்டார்கள். தலைவர் கலைஞர் ஆட்சியில் பெண்கள் அடுப்பே ஊத வேண்டாம்... கேஸ் ஸ்டவ் கொடுக்கிறேன் என்று கொடுத்தார். அப்போது கூட ஒரு பர்னர் இருந்தால் போதும் என்றார்கள் அதிகாரிகள். ஆனால் கலைஞர் இரு பர்னர் இருக்கும் ஸ்டவ் கொடுத்தார். இரண்டு பர்னர் கொடுத்தால் ஒன்றில் சாதம் வைப்பார், ஒன்றில் குழம்பு வைப்பார். அடுப்படியில் இருந்து சீக்கிரம் வெளியே வந்து உலகத்தில் என்ன நடக்கிறது என்பது பற்றி தெரிந்துகொள்வார்கள் பெண்கள் என்று கூறினார் தலைவர் கலைஞர். இதுதான் திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட மாடல் ஆட்சி.

பெண்கள் கல்லூரியில் படித்துவிட்டு வெளியே வந்ததும் அவர்களுக்கான வேலை வாய்ப்பு உடனடியாக கிடைத்து விடவில்லை. ஆண்கள் செய்யும் வேலைகளை பெண்கள் செய்வார்களா என்ற கேள்வி இருந்தது. அப்படிப்பட்ட சூழலிலே பெண்களுக்கு அரசு வேலை வாய்ப்புகளில் 30% ஒதுக்கீடு தந்தவர் தலைவர் கலைஞர். பெண்ணை யார் கையிலாவது பிடித்துக் கொடுத்து கல்யாணம் செய்து கொடுத்துவிட வேண்டும் என்பதுதான் பல பெற்றோர்களின் எண்ணமாக இருந்தது. நீ பெண்ணை படிக்க வை, நான் கல்யாணம் செய்து கொடுக்கிறேன் என்று சொல்லி பெண்களுக்கு திருமண உதவித் தொகை திட்டம் கொண்டு வந்த ஆட்சி திராவிட மாடல் ஆட்சி. பத்தாவது வரை படித்த பெண் எப்படியாவது 12 ஆவதும் படித்து விடுவாள். 12 ஆவது பிறகு பெற்றோர்க்கு வருடத்துக்கு 24 ஆயிரம் ரூபாய்க்குள் வருமானம் என்றால் கல்லூரிக் கட்டணம் கிடையாது என்று வாய்ப்புகளை அதிகப்படுத்திக் கொடுத்த சூழல் உருவாக்கப்பட்டது.

படிப்பது என்பது பள்ளி, கல்லூரி படிப்பு மட்டுமல்ல. அதைத் தாண்டி தொடர்ந்து படிக்க வேண்டும். இதற்காகத்தான் இது போன்ற புத்தகக் காட்சிகள் இருக்கின்றன. எது உண்மை, எது சரி என்று பல புத்தகங்களைப் படித்துதான் தெரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு வாட்ஸப்பிலே பல செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. எங்கே படித்தீர்கள் என்று கேட்டால், வாட்ஸ் அப்பில் படித்தேன் என்கிறார்கள். அதிலே வருவது சரியா தவறா... அதற்கு வாய்ப்பிருக்கிறதா என்று புத்தகங்களில் படியுங்கள்.

பேரறிஞர் அண்ணா தனக்கு முக்கியமான அறுவை சிகிச்சை செய்வதற்கு முன் மருத்துவர்களிடம், ‘எப்போது அறுவை சிகிச்சை செய்யப் போகிறீர்கள்?’ என்று கேட்டிருக்கிறார். அதற்கு மருத்துவர்கள், ‘உங்களுக்கு ஏதாவது நேரம், காலம் பார்க்கும் எண்ணம் இருக்கிறதா? அதற்கேற்ற மாதிரி பண்ணலாம்’ என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு அண்ணா, ‘அதெல்லாம் எனக்கு கிடையாது. நான் ஒரு புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் எப்போது அறுவை சிகிச்சை என்று சொன்னீர்கள் என்றால் அதற்குள் அந்தப் புத்தகத்தை நான் படித்து முடித்து விடுவேன்’ என்று பதில் சொல்லியிருக்கிறார். அந்த அளவுக்கு புத்தகங்களை நேசித்தவர் அண்ணா.

பொன்னியின் செல்வன் புத்தகம் பற்றி சிலர் பேசினார்கள். எல்லாரும் படிக்க வேண்டிய புத்தகம். நான் கூட ஒரு காலத்தில் எடுத்தால் அத்தனை வால்யூம்களையும் படித்து முடித்து விட்டுதான் வைக்கிற அளவுக்கு மிக சுவாரஸ்யமான புத்தகம்.

ஆதித்த கரிகாலன் கொலை செய்யப்படுகிறார். அதை நாம் அந்த புத்தகத்தில் படிக்கிறபோது பாண்டிய நாட்டின் ஆபத்து உதவிகள் அவனை கொலை செய்ய முயற்சி செய்தார்கள் என்று சொல்லி யார் கொலை செய்தார்கள் என்று சொல்லாமல் முடிவடையும். ஆனால் இப்போது வந்த பொன்னியின் செல்வன் படத்தில் ஆதித்த கரிகாலன் தற்கொலை செய்துகொண்டார் என்று காட்டியிருக்கிறார்கள்.

ஆனால் கல்வெட்டுகளில் என்ன சொல்லியிருக்கிறது என்றால் பிராமணர்கள், அந்தணர்கள் ஆதித்த கரிகாலனை நயவஞ்சகமாக கொலை செய்தார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் பல ஆண்டுகள் அவர்களை யாரும் கேட்கவில்லை. ராஜராஜன் பட்டத்துக்கு வந்தபோதும் அவர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை. கொலை செய்தாலும் பிராமணர்களை தூக்கில் போட முடியாது. பிராமணர்களை கொன்றால் பிரம்மஹத்தி தோஷம் வரும் என்று சொல்லப்பட்டது. அதனால் ராஜராஜன் தன் அண்ணனைக் கொன்ற பிராமணர்களுக்கு உயர்ந்த பட்ச தண்டனையாக அவர்களின் நிலங்களை, சொத்துகளைப் பிடுங்கிக் கொண்டு விரட்டியடுத்து விடுவான். அவர்கள் போய் சேர நாட்டில் வாழ்வார்கள். மிக சுவாரஸ்யமான கதை பொன்னியின் செல்வன். ஆனால் அதற்குப் பின்னால் இருக்கும் உண்மை என்பது அந்த புத்தகத்தைத் தாண்டிப் போய் படிக்கும் போதுதான் தெரியவரும்.

பெண்கள் சம உரிமையோடு வாழலாம் என்ற மிகப்பெரிய பொக்கிஷம் நம் கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. பெண் உரிமை, பெண் சுயமரியாதை, பெண் கல்வி, பெண்களுக்கான வேலை வாய்ப்புகள் இதையெல்லாம் நாம் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்றால் இது எப்படி நமக்கு கிடைத்தது என்ற போராட்ட வரலாற்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

**நமக்கு தெரியாமலேயே உரிமைகளை உருவிக் கொண்டிருக்கிறார்கள்!**

உலகம் முழுதும் ஓட்டுரிமைக்காக பெண்கள் போராடினார்கள், சிறைப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள். ஆனால் இந்தியாவிலே முதன் முறையாக நீதிக் கட்சி ஆட்சியில்தான் பெண்களுக்கு ஓட்டுரிமை அளிக்கப்பட்டது.

நமக்கு தெரியாமலேயே நமது உரிமைகளை உருவிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் நாம் பெற்றிருக்கக் கூடிய உரிமைகளை தொடர்ந்து பெறுவதற்கு நாம் கடந்து வந்த போராட்டப் பாதைகளை அடுத்த தலைமுறைக்கு சொல்ல வேண்டும். குழந்தைகள் பெற்றோரிடம் கதை கேட்பார்கள். நாம் இந்த மேடையில் நிற்பதற்குக் காரணமான போராட்ட வரலாற்றை நம் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்லுங்கள். அவர்களும் இதை உணர்ந்து கொண்டால் இன்னும் எத்தனை தலைமுறைகள் ஆனாலும் நமது உரிமைகளை யாராலும் பறிக்க முடியாது” இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

இவ்விழாவில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ், வெளிநாடு வாழ் தமிழர் நல வாரிய தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, காங்கேயம் நகர ரோட்டரி முன்னாள் தலைவர் மோகன்ராஜ் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

---

## பகை வெல்லும் தி.மு.க. பட்டாளத்திற்கு

# கலைஞர் கோட்டம் ஒரு கலங்கரை விளக்கம்!

## ‘தினகரன்’ நாளேடு புகழாரம்!

சென்னை, ஜூன் 20 -

திருவாரூரில் இன்று திறக்கப்படும் கலைஞர் கோட்டம், பகை வெல்லும் தி.மு.க. பட்டாளத்திற்கு ஒரு கலங்கரை விளக்கம் என்று புகழாரம் சூட்டி ‘தினகரன்’ தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு:-

தேரோடும் திருவாரூரிலே கலைஞர் கோட்டம் நாளை திறக்கப்பட உள்ளது. கலைஞர் நூற்றாண்டு விழாவிற்கு பெருமை சேர்க்கும் நிகழ்வுகளில் இதுவும் ஒன்று என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இரண்டடியில் உலகையே அளந்த திருவள்ளுவருக்கு சென்னையில் காணப்படும் வள்ளுவர் கோட்டம் போல, திருவாரூரில் கலைஞர் கோட்டமும் அமைக்கப்பட்டுள்ளது. கலைஞரின் தாயார் அஞ்சுகம் அம்மையார் நினைவிடம் அமைந்துள்ள காட்டூர் பகுதியில் 7 ஆயிரம் சதுர அடியில், ரூ.12 கோடி மதிப்பீட்டில் இக்கோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. திருவாரூ ரில் தேர் வடிவில் அமைக்கப்பட்டுள்ள இக்கோட்டத்தில் கலைஞரின் திருவுருவ சிலை, அவரது பொதுவாழ்வை சித்தரிக்கும் அருங்காட்சியகம், அவரது தந்தை முத்து வேலரின் பெயரிலான நூலகம், 2 திருமண மண்டபங்கள் பாங்குற அமைக்கப்பட்டுள்ளன.

கலைஞர் கோட்டம் திறக்கப்படும் இந்நேரத்தில் கலைஞரின் போர் குணத்தை, தியாக வரலாற்றை தமிழ்நாடு நினைவு கூர வேண்டியதும் கட்டாயமாகும். 14 வயதிலே இந்தி திணிப்புக்கு எதிராக தமிழ்கொடி ஏந்தி போராட்டம் நடத்தியவர் கலைஞர். இந்தியாவில் ஒரு மாநில கட்சி முதன்முறையாக ஆட்சியை பிடிக்க அண்ணாவுக்கு தளபதியாய் துணை நின்றவர் கலைஞர். மனிதர்களை மனிதரே இழுக்கும் கை ரிக்ஷாக்களை ஒழித்ததோடு, குடிசைகளில் வாழ்வோருக்கு நிரந்தர வீடுகள், பார்வையற்றோருக்கு



தினகரன்

ஜூன் 19, 2023 திங்கட்கிழமை

கலைஞர் சரித்திரம்

தேரோடும் திருவாரூரிலே கலைஞர் கோட்டம் நாளை திறக்கப்பட உள்ளது. கலைஞர் நூற்றாண்டு விழாவிற்கு பெருமை சேர்க்கும் நிகழ்வுகளில் இதுவும் ஒன்று என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இரண்டடியில் உலகையே அளந்த திருவள்ளுவருக்கு சென்னையில் காணப்படும் வள்ளுவர் கோட்டம் போல, திருவாரூரில் கலைஞர் கோட்டமும் அமைக்கப்பட்டுள்ளது. கலைஞரின் தாயார் அஞ்சுகம் அம்மையார் நினைவிடம் அமைந்துள்ள காட்டூர் பகுதியில் 7 ஆயிரம் சதுர அடியில் ...

கண்ணொளி திட்டம், நில உச்சவரம்பு சட்டம், பெண்களுக்கு சொத்தில் சம பங்கு, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என இந்தியாவிற்கே முன்மாதிரியாக பல திட்டங்களை கலைஞர் கொண்டு வந்தார்.

இந்தியாவில் மாநில சுயாட்சிக்கு முதல் குரல் எப்போதுமே தமிழ்நாட்டில் இருந்துதான் எழும். அதற்கு தி.மு.க.வும், கலைஞருமே காரணமாகும். சுதந்திர தின விழாவில் மாநில முதல்வர்கள் தலைமை செயலகத்தில் கொடியேற்றும் உரிமையை பெற்று தந்தவர் கலைஞர். சாதி பிரிவினையை ஒழிக்க சமத்துவபுரங்கள், விவசாயிகளுக்கு உழவர் சந்தைகள், மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு என கலைஞரின் பெயர் சொல்லும் திட்டங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். தமிழ் அறிஞர்களுக்கு, அதிலும் வான் புகழும் வள்ளுவரை உலக அரங்கில் மிளிரச் செய்த பெருமையும் கலைஞரையே சாரும்.

சென்னையில் வள்ளுவர் கோட்டம் அமைத்திட திட்டமிட்டு, அதற்கான தேர், வள்ளுவர் சிலை, குறள் மணிமண்டபம், பிரமாண்ட கலையரங்கம் என ஒவ்வொன்றையும் இப்படித்தான் இருக்க வேண்டும் என சிற்பிக்கு அறிவுறுத்தி செதுக்கியவர் கலைஞர். காலத்தின் கொடூரம், மிசாவின் இரும்பு கரங்களில் தமிழ்நாடு சிக்கியபோது, அப்போதைய குடியரசு தலைவர் பக்ரூதீன் அலி வள்ளுவர் கோட்டத்தை திறந்தபோது, கலைஞருக்கு முறையான அழைப்பு கூட இல்லை. அந்த நாளில் ‘கோட்டம் திறக்கப்படுகிறது, குறளோவியம் தீ ட்டப்படுகிறது’ என உடன்பிறப்புகளுக்கு கலைஞர் எழுதிய கடிதம் ஒரு வரலாற்று பெட்டகம்.

அந்தளவுக்கு உணர்ச்சி பிழம்புகள் அதில் ஊடுருவியிருந்தன. திறப்பு விழாவிற்கு அழைக்காவிட்டால் என்ன, காலச்சக்கரம் சுழன்றபோது, 1989ல் அவர் மீண்டும் ஆட்சியை பிடித்தபோது, பதவியேற்பு விழாவை அதே வள்ளுவர் கோட்டத்தில் நடத்தி, தன் சபதத்தை நிறை வேற்றினார் கலைஞர். ‘சரித்திரத்தில் நமக்கு கிடைக்கிற இடம், சலுகையால் பெறக்கூடியது அல்ல’ என கலைஞரின் உறுதிமிக்க வார்த்தைகளே இன்றும், திமுகவை உரமேற்றி கொண்டிருக்கிறது. பகை வெல்லும் திமுக பட்டாளத்திற்கு கலைஞர் கோட்டம் ஒரு கலங்கரை விளக்கம் என்றே கூறலாம்.

இவ்வாறு ‘தினகரன்’ தலையங்கம் எழுதியுள்ளது.




முதலமைச்சர் கோப்பைக்கான 2023ஆம் ஆண்டு மதுரை மாவட்ட அளவில் நடைபெற்ற பல்வேறு விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற ஆயிரக்கணக்கான வீரர், வீராங்கனைகளுக்கு ரூபாய் 44 லட்சம் மதிப்பீட்டில் பரிசுத் தொகையினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேரில் வழங்கி பாராட்டிய போது எடுத்த படம். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், ஆணையாளர் பிரவீன் குமார், கிழக்கு மண்டல தலைவர் வாசுகி சசிகுமார் மற்றும் விளையாட்டு துறை நிர்வாகிகள், அதிகாரிகள் உள்ளனர்.